மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி * இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.

2. ஒழுங்குப் பிரச்சினை

ஓர் உறுப்பினரைப் பார்க்க வந்த அரசிதழ் பதிவுபெரு அலுவலர் யூனியனைச் சேர்ந்த சிலர் கைது செய்யப்பட்டிருப்பதாக கூறப்படுவது பற்றி

திரு. மு. அம்பிகாபதி : ஓர் ஒழுங்குப் பிரச்சினை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 11 ஆம் தேதி காலையில் 11 மணிக்கு என்னைப் பார்ப்பதற்காக என்.ஜி. ஓ. யூனியனைச் சேர்ந்த ரவிசெல்வம் , ஜெகந்நாதன் ஆகியோர் வந்திருக்கிறார்கள். அவர்களைக் கோட்டைக் காவலர்கள் கைது செய்து வெளியே நிறுத்தியிருக்கிறார்கள்.

அவர்கள் மீது. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து திரு. அம்பிகாபதி அவர்கள் எந்த அடிப்படையில் இதைப் பற்றி சொல்லுகிறார்கள் என்று சொல்ல வேண்டும். விதியின் அடிப்படையில் எழுத்து மூலம் எழுதி அனுப்புங்கள். இதை ஒழுங்குப் பிரச்சினையாக எழுப்ப வேண்டாம். எழுதி அனுப்புங்கள்.

திரு மு. அம்பிகாபதி : இது என்னுடைய உரிமைப் பிரச்சினை. என்னைப் பார்க்க வந்தவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து எழுத்து மூலம் எழுதி அனுப்புங்கள். உட்காருங்கள்.

(3) அமைச்சரின் அறிக்கை.

இராமநாதபுரம் மாவட்டத்தில் பணியிறக்கம் செய்யப்பட்ட தமிழாசிரியர்களை மீண்டும் தமிழாசிரியர்களாக நியமிப்பது குறித்து

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, திருவாளர்கள் ஜே. ஜேம்ஸ், சோ. பாலகிருஷ்ணன், செ. சிவசாமி, கிருஷ்ணன், எம். அண்ணாமலை, என். பழனிவேல் ஆகிய சட்டப் பேரவை உறுப்பினர்கள் பேரவையின் விதி 42-ன் கீழ் எழுப்பியுள்ள அவசரமும் பொது முக்கியத்துவமும் வாய்ந்த பிரச்சினையைக் குறித்து விவாதிக்க அவையை ஒத்திவைக்ககோரிய அந்தத் தீர்மானம் தள்ளுபடி செய்யப்பட்டு மறு